அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை : திரு. அ.ம. துரைவீரமணி

ந.க.எண். : 1/2024/அ.மு.ஊ நாள் : 02.05.2024

பொருள் : மனை பிரிவு ஒப்புதல் - வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் - அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி - சர்வே எண்: 206/1A1 , 2A2 , 2B , 2C ,2D , 207/1 & 209/2 -ல் 42(Regular Plots 1 to 39 & EWS Plots 40 to 42) கொண்ட இடத்தில் 42 மனைபிரிவு அமைக்க அங்கீகரித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் திட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்டது - இறுதி அனுமதி வழங்குதல் - சார்ந்து.

பார்வை : 1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் காந்தி இர்வின் சாலை, எழும்பூர் சென்னை-8 அவர்களின் கடிதம் எண். L1/0235/2023 நாள் : 26.04.2024

பார்வை : 2. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் PPDLO No: 90/2024 Permit No: 15812 நாள் : 26.04.2024

****

உத்தரவு:

பார்வை-1ல் கண்டுள்ள கடிதத்தின் படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அயப்பாக்கம் ஊராட்சி சர்வே எண். 206/1A1 , 2A2 , 2B , 2C ,2D , 207/1 & 209/2 -ல் 42(Regular Plots 1 to 39 & EWS Plots 40 to 42) கொண்ட இடத்தில் 42 மனையாக அமைக்க மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து உத்தரவிடப் பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவு ஒப்புதலினை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைபிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்படவேண்டும். அதோடு தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிக்கால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மதுதாரர் அமைத்து தர வேண்டும். மனையின் அளவுளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளின் மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கபடவேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரியங்களுக்காக பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

Scanned with OKEN Scanner

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவு செய்வதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்பிற்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த கட்டிடமோ கட்டக்கூடாது.
6. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்கு இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்த வெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டு தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டும் அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமான பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்பட்ட மனையின் பின்பக்க மட்டத்திலிருந்து 12 அடி உயரத்திற்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.
7. மனையின் பரப்பின் 50 சதத்திற்கும் மேல் கட்டிடம் கட்டக்கூடாது
8. கடகால் போட தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள் கழணி ஏற்படுத்தக் கூடாது.
9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதால் எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத் திட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படம் அத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு : வரைப்படம்.

அ.மு. தலைவர்

தலைவர்/செயல்அலுவலர்
அயப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
கிராம ஊராட்சி

பெறுநர்:

திரு.A. குருசாமிபாண்டியன்
எண்-1489 , மணிவிலாஸ் கார்டன்
கமலன் நகர் பெங்களூர்

Do not w

Scanned with OKEN Scanner

Do not waste water, use it economically.

Original

Ayappakkam Village Panchayat, Villivakkam Block, Tiruvallur District

Miscellaneous Receipt

Receipt Number : 2024-2025/2/1/4/7/52

Date : 03-05-2024

Name of the Payer : A Gurusamy Pandian

Payer Mobile Number : 9841005444

Mode of Payment : Demand Draft

Demand No	Major Head	Minor Head	Receipt Detail	Amount (₹)
88545	Misc	Misc receipt (Misc receipt)	LAYOUT APPROVAL FEES (DEMAND DRAFT NO 127627)	20,000
			Total	20,000

Rupees(₹) :Twenty Thousand Only

Panchayat Secretary,
Ayappakkam Village Panchayat.

Executive Authority/
Village Panchayat President
Ayappakkam Village Panchayat

*This is Computer Generated Bill. No Signature Required.

A P Manik

M. Sunith

Scanned with OKEN Scanner